உ

ஓம் நமசிவாய

அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்

பதிவு இல : HA / 4 / JA / 350

திரு / திருமதி / செல்வி .....

வருடாந்த பொதுக்கூட்டம் - 2025.

எமது மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 15.06.2025ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணிக்கு மன்ற அலுவலகத்தில் தலைவர் Dr. ம.அருங்கரன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இப்பொதுக்கூட்டத்திற்கு தாங்கள் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்.

1. தேவாரம்.
2. தலைவர் உரை.
3. கடந்த பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தலும், ஏற்றுக்கொள்ளலும்.
4. செயற்பாட்டு அறிக்கை சமர்ப்பித்தல்.
5. வருட நிதியறிக்கை சமர்ப்பித்தல்.
6. புதிய நிர்வாக சபை தெரிவு. (11 உறுப்பினர்கள், கணக்காய்வாளர் தெரிவு)
7. வேறு பொருத்தமான விடயங்கள்.
8. நன்றியுரை.
9. தேவாரம்.

நன்றி.

.....
Dr. ம. அருங்கரன்.
தலைவர்.
28.05.2025.

தலைவர்
அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்
பதிவு இல. HA/4/JA/350

.....
திரு. ஜெ. சதீசன்.
கௌரவ செயலாளர்.
28.05.2025.

செயலாளர்
அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்
பதிவு இல. HA/4/JA/350

உ

ஓம் நமசிவாய

அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்.

பதிவு இல : HA / 4 / JA / 350

செயற்பாட்டு அறிக்கை 07.04.2024 – 31.05.2025

கூட்டங்கள்

இக்காலப்பகுதியில் 07.04.2024ஆம் திகதி ஒரு பொதுச்சபை கூட்டமும் ஆறு (06) நிர்வாகசபை கூட்டங்களும் மன்ற அலுவலகத்தில் நடாத்தப்பட்டன.

ஆலய திருவிழாக்கால நிகழ்ச்சிகள்

- நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பகவிநாயகர் தேவஸ்தான மஹோற்சவ காலத்தில் தினமும் மாலை வசந்தமண்டப பூசை ஆரம்பிப்பதற்கு முன்னர் கூட்டுப்பிரார்த்தனையும் இரண்டாம் திருவிழா முதல் எட்டாம் திருவிழா வரை தினமும் இரவு திருவிழா நிறைவடைந்ததும் சொற்பொழிவும் நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு திரு இ.திருநாவுக்கரசு (பிரான்ஸ்) அவர்கள் பூரண அனுசரணை வழங்கியிருந்தார். தேர் திருவிழாவன்று தேர் இருப்பிடத்தை அடைந்ததும் வில்லுப்பாட்டு நிகழ்வும் நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு திரு. க.திலகேஸ்வரன் (பிரான்ஸ்) அவர்கள் பூரண அனுசரணை வழங்கியிருந்தார். மேலும், ஆலயத்தினால் வருடா வருடம் நடாத்தப்பட்டுவரும் தரம் 03 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கான சைவசமய அறிவுப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு ஊக்குவிப்பு பரிசிலும் எமது மன்றத்தினால் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

- அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவ காலத்தில் அரியாலையூரைச் சேர்ந்த இசைத்துறையில் ஈடுபாடுடையவர்களுக்கு களம் அமைத்துக்கொடுக்கும் வகையிலும் அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் கலைத்துறையை பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் மூலம் நிகழ்ச்சிகள் ஒழுங்குபடுத்தப்பட்டு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது. அவ்வகையில்
  - முதலாம் திருவிழா முதல் சப்பறத்திருவிழா வரையான பதின்மூன்று நாட்களும் தினமும் மாலை வசந்தமண்டப பூசை ஆரம்பிப்பதற்கு முன்னர் கூட்டுப்பிரார்த்தனையும் (பஜனை)
  - முதலாம் திருவிழா முதல் ஏழாம் திருவிழா வரை இரவு திருவிழா நிறைவடைந்ததும் திரு க.பாலசண்முகன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அவர்களது சமய சொற்பொழிவு நிகழ்வு நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு மகாமாரி அம்மன் கோவில் கொடியேற்ற தின அன்னதான உபயகாரர்களான இங்கிலாந்து வாழ் அம்பிகை அடியார்கள் பூரண அனுசரணை வழங்கியிருந்தார்கள்.
  - எட்டாம் திருவிழாவன்று திருமதி மதிவதனி விஜிந்தன், சங்கீத கலாவித்தகர் முதுகலைமாணி அவர்களது நெறியாட்கையில் கீதவாஹினி இசைக்கல்லூரி மாணவர்களது "வாத்திய பிருந்தா" நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு மகாமாரி அம்மன் கோவில் கொடியேற்ற தின அன்னதான உபயகாரர்களான இங்கிலாந்து வாழ் அம்பிகை அடியார்கள் பூரண அனுசரணை வழங்கியிருந்தார்கள்.
  - ஒன்பதாம் திருவிழாவன்று திரு சி.சாருஜன், கலைமாமணி அவர்களது நெறியாட்கையில் அரியாலை சனசமூக நிலைய இசைக்கல்லூரி மாணவர்களது "பல்லியம்" நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு அரியாலை சனசமூக நிலையத்தினர் பூரண அனுசரணை வழங்கியிருந்தார்கள்.
  - பத்தாம் திருவிழாவன்று திருமதி அ.கிருஷ்ணாலினி, சங்கீத கலாவித்தகர் (வயலின், புல்லாங்குழல்) முதுகலைமாணி அவர்களது நெறியாட்கையில் கீதவாஹினி இசைக்கல்லூரி மாணவர்களது "வாத்திய சங்கமம்" நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு திரு.கூ.அகிலன் அவர்கள் பூரண அனுசரணை வழங்கியிருந்தார்கள்.
  - கைலாசவாகன திருவிழாவன்று பக்தி பாமாலை இசைக்கச்சேரி நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு நோர்வே வாழ் திருமதி தென்மொழி நேதாஜி அவர்கள் பூரண அனுசரணை வழங்கியிருந்தார்கள்.

CamScanner

- பன்னிரண்டாம் திருவிழாவன்று திருமதி பாலினி கண்ணதாஸ், பரத கலாவித்தகர் நுண்கலைமாணி அவர்களது நெறியாட்கையில் அரியாலை ஏழிசை மிருதங்க நர்த்தனாலய மாணவர்களின் "நடன நிகழ்ச்சி" நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு மகாமாரி அம்மன் கோவில் கொடியேற்ற தின அன்னதான உபயகாரர்களான இங்கிலாந்து வாழ் அம்பிகை அடியார்கள் பூரண அனுசரணை வழங்கியிருந்தார்கள்.
- தேர்த்திருவிழாவன்று தேர் இருப்பிடத்தை அடைந்ததும் அழகேசன் மைந்தர்களது "இசைக்கச்சேரி" நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு மகாமாரி அம்மன் கோவில் கொடியேற்ற தின அன்னதான உபயகாரர்களான இங்கிலாந்து வாழ் அம்பிகை அடியார்கள் பூரண அனுசரணை வழங்கியிருந்தார்கள்.
- எமது மன்றத்தினால் வருடாந்தம் நடாத்தப்பட்டுவரும் தரம் 03 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கான சைவசமய அறிவுப்போட்டி இவ்வருடமும் கோவில் கல்யாண மண்டபத்தில் நடாத்தப்பட்டதுடன் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்றவர்களுக்கு ஊக்குவிப்பு பரிசிலும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு மகாமாரி அம்மன் கோவில் கொடியேற்ற தின அன்னதான உபயகாரர்களான இங்கிலாந்து வாழ் அம்பிகை அடியார்கள் பூரண அனுசரணை வழங்கியிருந்தார்கள்.

❖ அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான திருவிழாவின்போது தினமும் வசந்தமண்டப பூசை ஆரம்பிப்பதற்கு முன்னர் கூட்டுப்பிரார்த்தனையும் முதலாம் திருவிழா முதல் எட்டாம் திருவிழா வரை தினமும் இரவு திருவிழா நிறைவடைந்ததும் சைவப்புலவர் திருமதி கமலா அவர்களின் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சியும், கைலாசவாகன திருவிழா நிறைவடைந்ததும் திரு சி.சாருஜன் கலைமாமணி அவர்களது நெறியாட்கையில் அரியாலை சனசமூக நிலைய இசைக்கல்லூரி மாணவர்களது "பல்லியம்" நிகழ்ச்சியும் நடாத்தப்பட்டது.

❖ அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான சிவன் கோவில் அலங்காரத் திருவிழாவின்போது தினமும் வசந்தமண்டப பூசை ஆரம்பிப்பதற்கு முன்னர் கூட்டுப்பிரார்த்தனையும் முதலாம் திருவிழா முதல் எட்டாம் திருவிழா வரை தினமும் திருவிழா நிறைவடைந்ததும் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சியும், தீர்த்தத்திருவிழா நிறைவடைந்ததும் கூட்டுப்பிரார்த்தனையும் நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் நோர்வே வாழ் சித்திவிநாயக அடியார்கள் பூரண அனுசரணை வழங்கியிருந்தார்கள்.

மஹா கும்பாபிஷேக நிகழ்ச்சிகள்

2024ஆம் ஆண்டு நடைபெற்ற அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக நிகழ்வின்போது தினமும் காலை கும்பாபிஷேக கிரிகைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் கூட்டுப்பிரார்த்தனையும், சிறப்பு நிகழ்ச்சியாக கர்நாடக சங்கீத கச்சேரியும் மன்றத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டு நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்காக அரியாலையூரைச் சேர்ந்த கர்நாடக சங்கீத துறையில் ஈடுபாடுடைய மாணவர்களை ஒன்றிணைத்து துறைசார்ந்தவர்களின் நெறிப்படுத்தலுடன் நிகழ்ச்சி ஒழுங்குசெய்யப்பட்டது.

நவராத்திரி விழா

எமது மன்றத்தினால் வருடாநதம் விமரிசையாக கொண்டாடப்படும் நவராத்திரி விழாவை முன்னிட்டு

- நவராத்திரி விரதகாலத்தில் தினமும் மாலை மன்ற அலுவலகத்தில் பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- நவராத்திரி விழாவானது அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில் கல்யாண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு திருமதி கமலா, சைவப்புதல்வர் அவர்கள் பிரதம விருந்தினராக அழைத்து கௌரவிக்கப்பட்டார்.
- இவ்விழாவிற்கு அறநெறிப்பாடசாலை மாணவர்களது நிகழ்ச்சிகளும், சிறப்பு நிகழ்ச்சியாக கலைமாமணி திரு சி.சாருஜன் அவர்களது நெறியாட்கையில் அரியாலை சனசமூக நிலைய இசைக்கல்லூரி மாணவர்களது "பல்லியம்" நிகழ்ச்சியும் நடாத்தப்பட்டது.
- இந்நிகழ்ச்சியை முன்னிட்டு தரம் 03 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கிடையில் நான்கு பிரிவுகளாக மாலை கட்டும் போட்டி, கோலம் போடும் போட்டி, பண்ணிசைப் போட்டி ஆகிய மூன்று போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பணப்பரிசிலும் வழங்கப்பட்டது.
- பெரும் எண்ணிக்கையான அறநெறிப்பாடசாலை மாணவர்களது பங்குபற்றுதலுடன் நிடைபெற்ற இவ்விழாவிற்கு நோர்வே வாழ் சித்திவிநாயக அடியார்களும் பூரண அனுசரணை வழங்கியிருந்தார்கள்.

CamScanner

தைப்பொங்கல் விழா

தைப்பொங்கல் தினத்தன்று காலை எமது மன்றத்தில் பொங்கல் பொங்கி தைப்பொங்கல் நிகழ்வு சிறப்பாக நடாத்தப்பட்டது. இப்பொங்கல் நிகழ்விற்கு எமது இளைஞர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்கள். 2024ஆம் ஆண்டு திருவெம்பாவை நாட்களில் அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சி பாடலை பாடிய சிறுவர்களுக்கும், அவர்களை வழிநடத்திச்சென்ற திரு. அ. பரமராஜா அவர்களுக்கும் ஊக்குவிப்பு பரிசுகள் வழங்கப்பட்டது. இவ் ஊக்குவிப்பு பரிசுகளை வழங்குவதற்கு திரு. பாலசுந்தரம் சங்கரன் அவர்கள் பூரண அனுசரணை வழங்கியிருந்தார்.

சிவராத்திரி (ஆலய தரிசனம்)

சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு அரியாலை மக்களுக்கு சிவ ஆலய தரிசனத்திற்கான பொதுவசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது. அவ்வகையில் சிவன் ஆலய தரிசனம் செய்வதற்கு முன்வந்தவர்களை அன்றையதினம் காலை மன்றத்தில் இருந்து அழைத்துச்சென்று உருத்திரபுரம் சிவன் கோவில், ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரம் மற்றும் மன்னார் திருக்கேதீச்சரம் ஆகிய தலங்களுக்கு யாத்திரை செய்தபின் மீண்டும் அன்றையதினமே மாலை அரியாலைக்கு திருப்பி அழைத்துவரப்பட்டனர். இவ் ஆலய தரிசன சிவத்தொண்டிற்காக திரு. நடராஜா நேதாஜி (நோர்வே) அவர்கள் போக்குவரத்து அனுசரணையினையும், திரு. அ. பரமராஜா அவர்கள் அடியவர்களுக்கான போசன அனுசரணையினையும் வழங்கியிருந்தார்கள்.

மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்ட செயற்திட்டங்கள்.

- ஆலய திருவிழாக்காலங்களில் கூட்டுப்பிரார்த்தனை, சொற்பொழிவு, கலை நிகழ்ச்சிகள் நடாத்துதல்
- ஆலய மஹாகும்பாபிஷேக சிறப்பு நிகழ்ச்சிகள் நடாத்துதல்
- இசைத்துறையில் ஈடுபாடுடையவர்களுக்கு களம் அமைத்துக்கொடுக்கும் வகையிலும் அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்தல்
- சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு அரியாலை மக்களுக்கு சிவ ஆலய தரிசனத்திற்கான வசதிகள் ஏற்படுத்திக்கொடுத்தல்
- அரியாலையூரைச் சேர்ந்த அறநெறி பாடசாலை மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் நவராத்திரி விரத பூசையை முன்னிட்டு கலை போட்டிகள் மற்றும் கலை நிகழ்வுகள் நடாத்துதல்
- இந்து இளைஞர்களை ஒருங்கிணைக்கும் வகையில் தைப்பொங்கள் தினத்தன்று தைப்பொங்கல் நிகழ்வினை மன்றத்தில் சிறப்பாக நடாத்துதல்

மன்றத்தின் எதிர்கால செயற்திட்டங்கள்.

- அறநெறி பாடசாலைகளை ஊக்குவித்தல்.
- தீட்சை வழங்கும் நிகழ்வு நடத்துதல்.
- கூட்டுப்பிரார்த்தனை குழு (பஜனைக்குழு) மற்றும் பக்கவாத்திய இசைக்கருவி குழு அமைத்தல்
- நிதி நிலைமையையும், அலுவலக பாதுகாப்பும் மேம்படுத்துதல்.

நன்றிகள்.

- எமது மன்றத்தின் செயற்பாடுகளில் பங்குகொள்ளும் அரியாலையூர் இளைஞர்கள், அங்கத்தவர்கள்.
- எமது மன்றத்திற்கு அனுசரணை, அன்பளிப்பு வழங்கிய அனைவருக்கும்.
- சமய நிகழ்ச்சிகளை நடத்த அனுமதித்து ஒத்துழைப்பு வழங்கிய கோவில் நிர்வாகிகள்.

அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

நன்றி.

Dr. ம். அருங்கரன்.
தலைவர்

தலைவர்
அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்
பதிவு இல. HA/4/JA/350

திரு. ஜெ. சதீசன்
கௌரவ செயலாளர்.

செயலாளர்
அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்
பதிவு இல. HA/4/JA/350

CamScanner

அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்

2024.04.01 முதல் 2025.03.31 வரையான காலப்பகுதிக்கான

கொள்ளல் கொடுத்தல் கணக்கு

வரவு		
விபரம்	தொகை	தொகை
2024.04.01 இல் காசு மீதி	(19,166.69)	
வங்கி மீதி	257,003.43	237,836.74
பெறுவனவுகள்		
பொ. இலங்கேஸ்வரன்	25,000.00	
ப. ஸ்ரீஸ்கநதன்	5,000.00	
ஆ. சுதர்சனன்	2,500.00	
நோர்வே அடியார்	58,000.00	
மகாமாரி அம்மன் கொடியேற்ற அன்னதான உபயகாரார் - (அம்மன் ஆலய நிகழ்வுகள் அனுசரணை)	140,000.00	
இ. திருநாவுக்கரசு - (கற்பக விநாயகர் ஆலய நிகழ்வு அனுசரணை)	16,000.00	
க. திலேகேஸ்வரன் (கற்பக விநாயகர் நிகழ்வு அனுசரணை)	30,000.00	
பா. சங்கரன் - தைப்பொங்கல் நிகழ்வு அனுசரணை	20,000.00	
யோ. ராகுலன் - மன்றப் பாதுகாப்பு அன்பளிப்பு	50,000.00	
ந. நேதாஜி - சிவராத்திரி தின தலயாத்திரை அனுசரணை	55,000.00	
நோர்வே சித்திவிநாயகர் அடியார்கள் - சிவன் கோவில் திருவிழா நிகழ்வு அனுசரணை	40,026.83	
நோர்வே சிததிவிநாயகர் அடியார்கள் - நவராத்திரி தின நிகழ்வு அனுசரணை	55,010.21	
ஆயுள் அங்கத்துவம்	5,000.00	
வங்கி வட்டி	6,722.43	508,259.47
		746,096.21

செலவு		
விபரம்	தொகை	தொகை
கொடுப்பனவுகள்		
ஆலய திருவிழாக்கால நிகழ்வுகள்		
கற்பக விநாயகர் ஆலயம்	37,000.00	
மகாமாரி அம்மன் கோவில்	95,010.00	
சிததிவிநாயகர் ஆலயம்	40,292.00	172,302.00
நவராத்திரி	53,615.00	
தைப்பொங்கல்	15,820.00	
சிவராத்திரி ஆலய தரிசனம்	52,000.00	
மின்கட்டணம்	15,300.00	
வங்கி வட்டி வரி	336.12	137,071.12
31.03.2025 வங்கி மீதி	378,426.78	
31.03.2025 ல் காசு மீதி	58,296.31	436,723.09
		746,096.21

Dr. ம. அருங்கரன்.

தலைவர்

தலைவர்
அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்
பதிவு இல. HA/4/JA/350

திரு. சி. ஆறுமுகதாசன்.

பொருளாளர்

பொருளாளர்
அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்
பதிவு இல. HA/4/JA/350

CamScanner

அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்

செலவு விபர அறிக்கை (2024.04.01 - 2025.03.31)

திருவிழாக் கால நிகழ்வுகள் - 172,302.00

அம்மன் கோவில் நிகழ்வுகள்		
இல	விடயம்	தொகை
1	பனர்	1,200.00
2	சொற்பொழிவு	28,000.00
3	பொன்னாடை	1,500.00
4	பரிசுப் பொருள்	17,310.00
5	வாத்திய பிருந்தா	7,000.00
6	நடன நிகழ்வு	10,000.00
7	தேர் இசைக்கச்சேரி	30,000.00
	தொகை	**95,010.00**

நீர்நொச்சிதாழ்வு சித்திவிநாயகர் ஆலயம்

இல	விடயம்	தொகை
1	பனர்	1,000.00
2	பொன்னாடை	900.00
3	பரிசுப் பொருள்	8,392.00
4	ஒலி அமைப்பு	30,000.00
	தொகை	**40,292.00**

நல்லூர் தெற்கு கற்பக விநாயகர் கோவில்

இல	விடயம்	தொகை
1	சொற்பொழிவு	12,000.00
2	வில்லிசை	25,000.00
	தொகை	**37,000.00**

(95,010.00 + 40,292.00 + 37,000.00 = 172,302.00)

தைப்பொங்கல் - 15,820.00		
1	பூசைப் பொருள்	500.00
2	படையல் பொருட்கள்	1,120.00
3	பொங்கல் பொதி	1,950.00
4	பழவகை	500.00
5	வெடி	950.00
6	திருப்பள்ளிஎழுச்சி கௌரவிப்பு	10,800.00
	தொகை	**15,820.00**

சிவராத்திரி பயணம் - 52,000.00

1	பஸ் போக்குவரத்து கொடுப்பனவு	52,000.00
	தொகை	**52,000.00**

நவராத்திரி - 53615.00		
இல	விடயம்	தொகை
1	படையல் பொருட்கள்	2,740.00
2	பூசைப் பொருட்கள்	1,940.00
3	பிரசார பொருட்கள்	5,935.00
4	பழங்கள்	8,100.00
5	மாலை	2,800.00
6	தட்சணை குருக்கள்	1,000.00
7	பிரசாதம் தயாரிப்பு கொடுப்பனவு	6,000.00
8	நடுவர் கொடுப்பனவு (4x1200)	4,800.00
9	போக்குவரத்து (கொழுமேடை)	500.00
10	பணப்பரிசில்கள்	19,800.00
	தொகை	**53,615.00**

அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்
அரன் நாமமே சூழ்க

உ

அரியாலை இளைஞர் இந்து மாமன்றத்தின் 01.04.2024 தொடக்கம் 31.03.2025 வரையான காலப்பகுதிக்கான கணக்காய்வு அறிக்கை

அரியாலை இளைஞர் இந்து மாமன்றத்தின் 01.04.2024 தொடக்கம் 31.03.2025 வரையான காலப்பகுதிக்கு எனக்கு சமர்ப்பிக்கப்பட்ட காசுக்கணக்குப் புத்தகம், வரவுப்பற்றுச்சீட்டு அடியிதழ்கள், செலவு உறுதிச்சிட்டுக்கள், நிர்வாகசபை குறிப்புக்கள், கொள்ளல் கொடுத்தல் கணக்கு ஆகிய ஆவணங்களைப் பரிசீலனை செய்த போது அவதானிப்புக்கள் பின்வருமாறு உள்ளது.

1. 31.03.2025 இல் காசுக்கணக்கு மீதி

கையில் காசு	-	58,296.31
வங்கி மீதி	-	378,426.78
மொத்த காசுக்கணக்கு மீதி	-	436,723.09

2. வரவுப்பற்றுச்சிட்டு புத்தக விபரங்கள் பின்வருமாறு :

புத்தக இல	கையளிக்கப்பட்ட பற்றுச்சிட்டு	பாவிக்கப்பட்ட ப.சிட்டுக்கள்	புதிய நிர்வாகத்திற்கு கையளிக்கவேண்டிய ப.சிட்டுக்கள்
1	78 – 100	78	79 – 100
2	175 – 200	175 – 185	186 – 200
3	206 – 300	206 – 208	209 – 300
4	301 - 400	-	301 - 400

3. இந்து சமய வழிபாடுகள் நலிந்துகொண்டு செல்லும் இன்றைய காலத்தில் அவற்றைக் கட்டிக்காத்து மக்களிடையே விளிப்புணர்வையும், அறிவையும் புகட்டுகின்ற கைற்கரியத்தினை பல வழிமுறைகளில் இம்மன்றம செய்துவருவது பாராட்டுக்குரியதும் வரவேற்கத்தக்கதும் தொடர்ந்து இத்தகைய தொண்டினை தொடரவேண்டியதும் அவசியமாகும்.

4. இம்மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தலயாத்திரைக்கு ரூபா 52,000.00 வாகனக்கூலியாக செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு கேள்வி நடைமுறை கடைப்பிடிக்கப்படாதுள்ளது. எதிர்காலத்தில் அதனை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

மேலேயுள்ள அவதானிப்புகளுடன் வரவுகள் சரிவர பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், செலவுகள் யாவும் கணக்கிடப்பட்டுள்ளது எனவும் அபிப்பிராயப்படுகின்றேன்.

24.05.2025